WCDS
94/1

# மே தினமும்
# தொழிலாளரும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மேதினமும் மலையகத் தொழிலாளரும்

''தனியொருவனுக்கு உணவில்லையெனில்
ஜகத்தினை அழித்திடுவோம்'' (பாரதி)

வருடா வருடம் உலகமெங்கும் மே மாதம் முதலாம் திகதி 'மே தினமாக', அதாவது தொழிலாளர் தினமாக நினைவு கூருவது இன்று எங்கும் நடைமுறையில் இருக்கின்றது. ஆனால் இன்று எமது நாட்டில் மேதினத்தின் இலட்சியம், நோக்கம் ஆகியன சிதைவுற்று. அதன் புனிதத்தன்மை மறக்கப்பட்டுள்ளது. இதனால் மே தினத்தின் சரித்திர வரலாற்றையும், மலையக மக்களின் மே தினத்தின் முக்கியத்துவத்தையும் ஆராய்வது மலையக மக்களின் முக்கிய கடமையாகும்.

## சரித்திர வரலாறு

உலகில் அநேகமான நாடுகளில் தொழிற்புரட்சி ஆரம்பமான காலகட்டத்தில் முதலாளித்துவ அமைப்புகள் தோன்றின. இந்த அமைப்புகள் தொழிலாளரது இரத்தத்தை உறிஞ்சி அவர்களை அடிமைகளாக, தங்கள் சுயநலத்திற்காக பலவழிகளிலும் அடக்கினார்கள். இந்த அடிமைத் தனத்திலிருந்து விடுபடுவதற்காக தொழிலாளர்க்ள் கையாண்ட வழிகளை முதலாளித்துவ அமைப்புகள் அரசியல் கட்சிகளோடும், காவல் துறையினரோடும் சேர்ந்து அடக்கினார்கள். தொழிலாளர்கள் ஒன்று சேர்வதையோ, கூட்டங்கள் கூடுவதையோ, வேலை நிறுத்தங்களில் ஈடுபடுவதையோ, கூட்டுப்பேரம் பேசுவதையோ இவர்கள் அனுமதிக்கவில்லை. ஆனால் தொழிலாளர்கள் உலகின் பல்வேறு இடங்களில் தங்களுடைய உரிமைக்ளுக்காக குரல் எழுப்பினார்கள்.

மேற்கூறப்பட்ட அதிகார அடக்குமுறைக்ள் மத்தியிலும் தொழிலாளர்கள் தங்கள் உரிமைகளுக்காக போராடி உயிர்த்தியாகங்கள் கூடச் செய்தார்கள். உதாரணமாக பின்வருவனவற்றைக் குறிப்பிடலாம்: பிரிட்டனில் 1824ல் உரிமைக்குரல் எழுப்புதல் ஆரம்பமானது. 1832ல் தொழிலாளர் சீர்திருத்தச் சட்டம் கொண்டுவரப்பட்டது. 1834ல் நாடு தழுவிய தொழிலாளர் ஐக்கியம் உருவானது. 1871ல் தொழிற்சங்க சட்டம் கொண்டுவரப்பட்டது.

அமெரிக்காவில் 1794ல் நிலையான தொழிலாளர் அமைப்புகள் உருவாகின. 1827ல் தொழிலாளர் கூட்டுக்குழு உதயமானது. 1886ல் சிக்காக்கோ நகரில் ''மேர்காமின் ஹார்வெஸ்டர் வேர்க்ஸ்'' தொழிலாளர் வேலை நிறுத்தம் நடைபெற்றது. பிரான்சில் 1848ல் தொழிலாளர் புரட்சி தோன்றியது. ரஷ்யாவில் 1917ல் அக்டோபர் புரட்சி இடம் பெற்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆரம்ப மேதினம்

ஆரம்ப காலங்களில் மக்கள் மே மாதம் முதலாம் திகதியை மே தினமாக அமைத்து அந்தநாளை சந்தோஷமாக கொண்டாடினார்கள். உதாரணமாக புராதன ரோமனியர்கள் காலத்தில் மே தினத்தன்று இளைஞர்கள் வயல்வெளிகளில் கூடி, ஆடிப்பாடி மகிழ்ந்தார்கள். மத்திய காலங்களில் மக்கள் மேதினத்திற்கு முந்திய நாளே கானகம் சென்று விருந்துண்டு மகிழ்ந்தார்கள். மறுநாள் அதிகாலையில் வீடு திரும்பு வார்கள்.

வடக்கு இங்கிலாந்தில் சில பகுதிகளிலே மேதினத்துக்கு முதல் நாள் இரவை 'விஷமக்கார இரவு' என அழைப்பார்கள். அன்று சில தமாஷாக் களில் ஈடுபடுவார்கள். உதாரணமாக வியாபார நிலையங்களில் பெயர் பலகைகள் மாற்றப்படும்.

பிரிட்டனில் சில பகுதிகளில் ''மே தின ராணி'' தேர்ந்தெடுக்கப் படுவது வழக்கம். ''ஹேய்ஸ்'' என்ற இடத்தில் மேதின ராணிக்கு மகுடஞ் சூட்டி மகிழ்வார்கள். இத்தகைய நிகழ்ச்சிகளை உள்ளடக்கிய மேதினம் பத்தொன்பதாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் தொழிலாளர் தினமாக மாறியது.

## இன்றைய மேதினம்

உலகத் தொழிலாளரின் உரிமைப் போராட்டங்களில் ஒன்றான 1886ம் ஆண்டு அமெரிக்கா நாட்டின் சிக்காகோ நகரத்தில் நடைபெற்ற ''மேர்காமின் ஹார்வெஸ்டர் வேர்க்ஸ்'' தொழிலாளர் வேலை நிறுத்தத் தின் போது பொலிசாரின் தாக்குதல்களால் ஆயிரக்கணக்கானோர் காயமுற்றனர் அந்த இடத்தில் மட்டும் 4 பேர் கொல்லப்பட்டனர். வேறு சந்தர்ப்பங்களில் 4 பேருமாக மொத்தம் 8 பேர் கொல்லப் பட்டார்கள். இந்த இரத்தம் சிந்திய போராட்டத்தின் வெற்றியாக அவர்களது நியாயமான கோரிக்கையான 8 மணி நேர வேலை 8 மணி நேர ஓய்வு (அறிவு) 8 மணி நேர உறக்கம் என்பது ஏற்றுக்கொள்ளப் பட்டது.

இச்சம்பவத்தை நினைவுகூரும் முகமாகவும், 'உலகத் தொழிலாளர் களே ஒன்றுபடுங்கள்' என்ற கோரிக்கையை பலப்படுத்தும் நோக்கமாக வும் 1889ல் பாரிஸ் நகரில் நடைபெற்ற 2 ஆவது சர்வதேச தொழிலா ளர் காங்கிரஸ் கூட்டத்தில் அன்று பழக்கத்திலிருந்த குதூகலக் கொண் டாட்டங்கள் நிறைந்த மே மாதம் முதலாம் திகதியை தொழிலாளரின் மகிழ்ச்சிதான் உலக சுபீட்சத்துக்கு வழிகோலும் என்ற சிந்தனையோடு அன்றைய தினத்தை தொழிலாளர் தினமாக பிரகடனப்படுத்தினார்கள். இதிலிருந்து பல நாடுகள் படிப்படியாக இத்தினத்தை தொழிலாளர் தினமாகக் கொண்டாடத் தொடங்கின.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இலங்கையில் தொழிலாள வர்க்க ஆரம்பம்

இலங்கையில் பிரித்தானிய காலனித்துவ காலத்தில் கோப்பிப் பயிர்ச் செய்கை (பணப் பயிராக) ஆரம்பிக்கப்பட்டது. அதைத் தொடர்ந்து பெருந்தெருக்களும், புகையிரதப் பாதைகளும் ஆரம்பமான கட்டத்திலிருந்து பிரித்தானிய முதலாளித்துவ கொள்கை இங்கேயும் படிப்படியாக வளர்க்கப்பட்டதன் மூலமாக, முதன் முதலாக மலையகத்தில் ஒரு தொழிலாள வர்க்கம் (அன்மைக்கால இந்தியத் தொழிலாளர்) தோன்றியது ஆனால் இத்தொழிலாளர் தாம் தொழிலாளர் என்ற உணர்வற்றவர்களாக, அடிமைகளாக வாழ்ந்தனர்.

இலங்கையின் தலைநகரமாகிய கொழும்பில் பல தொழிலாள இயக்கங்கள் 1893ற்கு பின்னர் ஆரம்பிக்கப்பட்டது. இவைகளில் முக்கியமான தொழிலாளர் நடவடிக்கைகள் பின்வருமாறு.

1893ல் இலங்கை அச்சுத் தொழிலாளர் சங்கம் ஆரம்பிக்கப்பட்டது முதல் தொழிற் சங்கம் இதுவேயாகும். 1896ல் சலவைத் தொழிலாளரின் ஒழுங்குசெய்யப்பட்ட வேலை நிறுத்தம் நடைபெற்றது. 1906ல் வண்டில் ஓட்டுவோரின் வேலை நிறுத்தமும், 1912ல் புகையிரதப் பகுதித் தொழிலாளரின் வேலை நிறுத்தமும் இடம்பெற்றது. 1920ல் துறைமுக, புகையிரப்பகுதித் தொழிலாளரின் வேலை நிறுத்தமும் மில்டன் தொழிற் சங்க போராட்டமும் இடம்பொற்றது. 1922ல் சிலோன் லேபர் யூனியன் அமைக்கப்பட்டது. 1923ல் சிலோன் லேபர் யூனியனால் ஒழுங்குசெய்யப்பட்ட பொதுவேலை நிறுத்தமொன்றை கொழும்பில் நடத்தியது. 1927ல் துறைமுக தொழிலாளர் வேலை நிறுத்தமும், 1928ல் டாக்சி ஓட்டுவோர், தொழிற்சாலை தொழிலாளர் ஆகியோரின் வேலை நிறுத்தமும் இடம்பெற்றது. 1929ல் டிராம் கார் தொழிலாளர் வேலை நிறுத்தம் இடம்பெற்றது. இந்த வேலை நிறுத்தத்தின்போது ஐந்து பேர் சுட்டுக்கொல்லப்பட்டனர் இந்த நடவடிக்கைகளின் காரணமாக 1930ம் ஆண்டு தொடங்கியே நகர்புறங்களில் வேலை செய்த சிங்கள, தமிழ், இந்தியத் தமிழ், மலையாளத் தொழிலாளர் மத்தியில் தொழிலாள வர்க்க உணர்வு ஏற்படத் தொடங்கியது.

இந்த நடவடிக்கைகளின் மூலமாக 1933ம் ஆண்டு இலங்கை சட்டசபை, தொழிற்சங்கங்கள் பதியப்பட வேண்டுமென்ற சட்டமூலத்தைக் கொண்டு வந்தது. இதற்கு தொழிலாளர் சார்பில் பல எதிர்ப்புகள் தெரிவிக்கப்பட்டும் இச்சட்டமூலம் 1935ம் ஆண்டு ஒரு ஆணையாக ஏற்றுக் கொள்ளப்பட்டது. இச்சட்டம் 1935ஆம் ஆண்டின் 14ஆம் ஆணை என அழைக்கப்பட்டு அமுலாக்கப்பட்டது. இந்த ஆணையின் கீழ் பல தொழிற்சங்கங்கள் தங்களை பதிவுசெய்யப் பின்வாங்கின. இவ்வாணையைப் பற்றி பற்பல சந்தேகங்கள் கிளப்பப்பட்டதே இதற்கு காரணமாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மலையகத்தில் தொழிலாளர்

பிரித்தானியர் ஏனைய நாடுகளில் பெருந்தோட்டத் துறைகளை ஏற்படுத்திய அதே பாணியிலேயே இலங்கையிலும் கோப்பி, தேயிலை, இறப்பர் தோட்டங்களை ஏற்படுத்தினார்கள். அக்கால கட்டத்தில், இலங்கையின் மலைப் பிரதேசங்களில் மக்கள் மிகக் குறைவாகவே குடியிருந்தனர். அப்படி வாழ்ந்தவர்களும் பெருந்தோட்டங்களில் வேலை செய்ய விரும்பவில்லை. அந்த மக்கள் தங்கள் விவசாயத் தொழிலில் திருப்தியும் தன்னிறைவும் கொண்டிருந்தனர். அக்காலகட்டத்தில் விவசாயிகளின் விவசாய நிலங்கள் அரசாங்கத்தினால் சுவீகரிக்கப்படவில்லை. மலைப் பிரதேசங்களில் சுமார் 3000ம் அடிகளுக்கு மேல் எவருமே குடியிருக்கவில்லை, ஆகையால் இலங்கை வாழ் சுதேச மக்களை வேலைக்கமர்த்த பிரித்தானிய தோட்டத் துரைமாரால் இயலவில்லை. ஆகவே அன்மை நாடான இந்தியாவில் இருந்து தொழிலாளர்களை இறக்குமதி செய்ய வேண்டிய நிலை அவர்களுக்கு ஏற்பட்டது. இந்தியத் தொழிலாளர்கள் பெருந்தோட்டங்களின் அதிகரிப்புக்கேற்ப பெருந்தொகையாக கொண்டுவரப்பட்டனர். கிரமமான இறக்குமதி 1828ம் ஆண்டிலிருந்து ஆரம்பமானது 1845ம் ஆண்டில் மாத்திரம் 73, 401 பேர் இலங்கைக்கு கொண்டுவரப்பட்டனர் இப்படியாக கொண்டுவரப்பட்ட இந்தியத் தொழிலாளர் தொகை 1948ம் ஆண்டில் இலங்கை சுதந்திரமடைந்த போது ஏறக்குறைய 13 லட்சம் பேராக இருந்தனர். 1948ம் ஆண்டு 18ம் இலக்க பிரஜாவுரிமை சட்டத்தின் மூலமாக இவர்கள் அனைவரும் நாடற்றவர்களாக ஆக்கப்பட்டனர். பின்னர் ஏறக்குறைய ஒருலட்சத்து முப்பதாயிரம் பேர் பிரஜாவுரிமை பெற்றனர் 1964ம் ஆண்டு சிறிமா – சாஸ்திரி ஒப்பந்தத்தின்போது 975, 000ம் மக்கள் நாடற்றவர்களாக கணிக்கப்பட்டிருந்தனர். இதன் பின் பல சட்டங்கள் இயற்றப்பட்டும் அதன் பயனாக பலர் பிரஜாவுரிமை பெற்றும், இன்றும் ஏறக்குறைய 300, 000 பேர் பிரஜாவுரிமை அற்றவர்களாக இருப்பது வருந்தத்தக்கதாகும். இவை மலையகத் தொழிலாளர்கட்கு இழைக்கப்பட்ட பெரியதொரு அநீதியாகும்.

## தொழிற்சட்டங்கள்

பிரித்தானிய அரசாங்கம் 1841ல் 5ம் இலக்க ஆணையை கொண்டு வந்தது. இந்த ஆணை தொழிலாளர்களின் நலனை மேம்படுத்துவதற்காக அமுல்செய்யப்பட்டாலும் அதனை சரியான முறையில் செயல் படுத்தவில்லை. தொழிலாளர்களும் இதைப்பற்றி அறிந்தவர்களாக இருக்கவில்லை.

1854ம் ஆண்டு தோட்டத் துரைமார் சங்கம் ஆரம்பிக்கப்பட்டது. இச்சங்கம் உற்பத்திபெருக்கம், பொருட்களை இடத்துக்கு இடம் கொண்டு செல்லல் போன்றவற்றில் மாத்திரமே கவனம் செலுத்தியது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1889ம் ஆண்டின் 13ம் இலக்க ஆணை (இந்திய) தோட்டத் தொழிலாளரைப் பற்றியதாகும். தொழிலாளரின் சம்பளம், அவர்களை தடையின்றி இறக்குமதி செய்வது என்பவை இதில் அடங்கியிருந்தது. 1917ம் ஆண்டின் 38ம் இலக்கச் சட்டம் உற்பத்தி பாதுகாப்பை பற்றியதாகும். வெளியார் எவரும் உத்தரவின்றி தோட்டங்களுக்குள் நுழைவதை இச்சட்டம் தடை செய்தது. மீறுபவர்கள் இச்சட்டத்தின்படி தண்டிக்கப்பட்டனர்

1921ம் ஆண்டு 1ம் இலக்க ஆணை. இது இந்தியத் தொழிலாளரது வருகையை மட்டுப்படுத்துவதற்காக கொண்டு வரப்பட்டது இது இந்திய அரசரங்கத்தின் நிர்பந்தத்தின் கீழ் கொண்டுவரப்பட்டது. இதனை நடைமுறைப்படுத்த ஒரு முகவர் 1923 ம் ஆண்டு நியமிக்கப்பட்டார். இவர் இந்திய அரசின் பிரதிநிதியாகவே செயற்பட்டார்.

1927ம் ஆண்டு கொண்டு வரப்பட்ட குறைந்த சம்பளச் சட்டம். இது 1929ம் ஆண்டு தொடக்கம் நடைமுறைப்படுத்தப்பட்டது.

1934ம் ஆண்டு தொழிலாளர் நஷ்ட ஈட்டுச் சட்டம் இயற்றப்பட்டது. 1935ம் ஆண்டு தொழிற்சங்க சட்டமும், 1939ம் ஆண்டு பேறுகால சலுகைகள் சட்டமும் கொண்டுவரப்பட்டது 1939ம் ஆண்டு சிறுவர்கள், இளைஞர்கள் சட்டம் கொண்டு வரப்பட்டது. 1841ம் ஆண்டு சம்பளச் சபைகள் சட்டம் இயற்றப்பட்டது.

இந்த ரீதியில் பல சட்டங்கள் தொழிலாளர் சம்பந்தமாக இயற்றப்பட்டமை குறிப்பிடத்தக்கது. இவற்றில் சில தொழிலாளருக்கு சாதகமாகவும் சில பாதகமாகவும் இருந்தன.

## தொழிற்சங்க அமைப்புகள்

1920 ஆண்டு ஆகஸ்ட் மாதம் 29ம் திகதி தோட்டச் சேவையாளர் சங்கம் ஆரம்பிக்கப்பட்டது.

1921ம் ஆண்டு அனைத்திலங்கை பெரிய கங்காணிமார் சங்கம் அமைக்கப்பட்டது. இவ்விரண்டுமே தோட்ட துரைமாரின் அநுசரணையைப் பெற்று இயங்கின

1931ம் ஆண்டு திரு. நடேச ஐயர் தொழிலாளர் சம்மேளனத்தை ஆரம்பித்தார் இதன் தலைமையகம் அட்டனில் இயங்கியது. 1940ம் ஆண்டு ஜனவரி மாதம் 19ம் திகதி பதிவு செய்யப்பட்டது.

1940 ம் ஆண்டு ஜூன் மாதம் 22ல் அகில இலங்கை தோட்டத் தொழிலாளர் சங்கம் பதியப்பட்டது.

1940ம் ஆண்டு ஜூன் 25ல் இலங்கை - இந்தியத் தொழிலாளர் காங்கிரஸ் பதிவு செய்யப்பட்டது. 1953ல் இலங்கை இந்திய காங்கிரஸ் இலங்கை தொழிலாளர் காங்கிரசாக மாறியது. இது பிளவுபட்டமையால் 1955ல் திரு. அசீஸ் தலைமையில் ஜனநாயக தொழிலாளர் காங்கிரஸ் ஆரம்பிக்கப்பட்டது.

இப்படியாக சங்கங்கள் பல தோன்றின. இன்று மலையகத் தொழிலாளரை பிரதிநிதித்துவப் படுத்த ஏறக்குறைய 50 தொழிற் சங்கங்கள் இருப்பது குறிப்பிடத்தக்கது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மலையகத் தொழிலாளரின் போராட்டங்களும், தியாகங்களும்

மலையகத் தொழிலாளர் தங்கள் உரிமைகளுக்காகப் பல போராட்டங்களை நடத்தியுள்ளார்கள். இப்போராட்டங்களின் விளைவாக பலர் உயிர்த்தியாகங்களைக் கூட புரிந்துள்ளார்கள். இவர்களை நாம் நன்றியுணர்வுடன் நினைவுகூர வேண்டும்.

நினைவுகூரப்பட வேண்டிய போராட்டங்களில் ஒன்றுதான் 5000ம் அடிகளுக்கு மேல் உள்ள பொக்வந்தலாவைப் பகுதியிலுள்ள கொட்டியாகலை தோட்டத்தில் நடைபெற்ற வேலை நிறுத்தம். இது 1939 ஏப்ரல் 17 ம் திகதி நடைபெற்றது தோட்டங்களில் மதுபானப் பாவனை, சூதாட்டம் போன்ற தீய பழக்கங்களை தடுத்து நிறுத்த ஒரு சங்கம் அமைக்கத் தொழிலாளர் தோட்ட நிர்வாகத்தைக் கேட்டனர். அநுமதி மறுக்கப்படவே தொழிலாளர் வேலை நிறுத்தம் செய்தனர். இதில் கலந்துகொண்டோரில் பாதிக்கு மேல் பெண்களாவர். பலமிரட்டல்கள் பயங்காட்டுதல்கள், இடர் பெற்ற போதிலும் தொழிலாளர் உறுதியாக நின்றனர் தொழிற் திணைக்களம் தலையிட்டு இத்தகராறை தீர்த்து வைத்தது. தொழிலாளர் வெற்றியுடன் வேலைக்குச் சென்றனர். இது தொழிலாளர் வாழ்க்கையில் ஒரு மைல் கல்லென வர்ணிக்கப்படுகின்றது.

1939ல் மேலும் 18 வேலை நிறுத்தங்கள் இடம்பெற்றன. இதை ''வேலை நிறுத்தக் காய்ச்சல்'' என வருணிக்கப்பட்டது.

அடுத்து கண்டியிலிருந்து 30 மைல் தொலைவிலுள்ள ஹேவாஹெட்ட என்னுமிடத்திலுள்ள முல்லேயா தோட்டத்தில் நடைபெற்ற வேலை நிறுத்தத்தினைக் குறிப்பிடலாம். இதில் சிங்கள - தமிழ் தோட்டத் தொழிலாளர் 1400 பேர் கலந்துக்கொண்டனர். அகில இலங்கை தோட்டத் தொழிலாளர் சங்கத்தின் தலைமையில் இது நடைபெற்றது,

தோட்டங்களில் சங்கம் அமைக்க உரிமை கோரியும், சம்பள அதிகரிப்பை கோரியும், சிறந்த வீட்டு வசதிகளைக் கேட்டும் இந்தப் போராட்டம் நடைபெற்றது. திரு. ஜெக்நாதன் என்ற ஆசிரியர் இதை ஒழுங்கு செய்ய முன்னின்று உழைத்தார். இலங்கை சம சமாஜ கட்சி இந்தப் போராட்டத்தில் தொழிலாளரை உற்சாகப்படுத்தினர். பொலிஸ் அடிதடியினால் திரு கோவிந்தன் என்பவர் கொல்லப்பட்டார். இந்தச் சம்பவத்தை நேரில் கண்ட 12 வயது சிறுவன் இராமையா சாட்சியமளித்தான். இந்த வேலை நிறுத்த அலை ஊவா மாகாணத்திற்கும் பரவியது. இது வேவெஸ்ஸ தோட்டத்திலும் வேலை நிறுத்தப் போராட்டத்தை உண்டுபன்னியது. இதன் பயனாக தோட்டத்தில் தொழிலாளர் சபைகள் ஏற்படுத்தப்பட்டன.

இதைத் தொடர்ந்து பல போராட்டங்கள் பெருந்தோட்டப் பகுதிகளில் இடம்பெற்றன. இதனால் பல தொழிலாளர்கள் உயிர்த் தியாகங்களையும் செய்தனர். குறிப்பாக 1939ல் ஒருவரும், 1942ல் ஒருவரும்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1950ல் இருவரும், 1953ல் இருவரும், 1957ல் மூவரும், 1958ல் ஐவரும், 1959ல் இருவரும், 1960ல் நால்வரும், 1961ல் ஐவரும், 1969ல் இருவரும் 1970ல் ஆறுவரும், 1977ல் ஒருவரும், 1980ல் ஒருவருமாக ஏறக்குறைய 3 பெண்கள் உட்பட 35 க்கு மேற்பட்டோர் உயிர்த் தியாகங்கள் புரிந்துள்ளனர். இவர்களில் 1977ல் டெவன் தோட்டத்தில் பலியான சிவனு லெட்சுமனன் குறிப்பிடத்தக்கவராவார், இன்னும் பலர் தங்கள் முகவரிகளை விட்டுச் செல்லாமலே மலையக மண்ணுக்குள் மறைந்துள்ளார்கள். இத்தியாகிகள் மேதின வைபவங்களில் நினைவு கூரப்படுதல் சாலச் சிறந்ததாகும்.

## இலங்கையில் மேதின

இலங்கையில் முதன் முறையாக 1980 ம் ஆண்டில் கொழும்பில் திரு ஏ. ஈ. குணசிங்கா தலைமையில் மேதினம் கொண்டாடப்பட்டது. ஆனால் 1955ம் ஆண்டுதான் மேதினம் ஒரு பொது விடுமுறை நாளாகப் பிரகடனப்படுத்தப்பட்டது. இதன் பின்னர்தான் ஒழுங்காய் பல அரசியல் கட்சிகளாலும், தொழிற்சங்கங்களாலும் மேதினம் கொண்டாடப்படத் தொடங்கின.

## மலையகத்தில் மேதினம்

மலையக மக்களுக்கு 1965ம் ஆண்டே மே தினம் பொது விடுமுறை தினமாகப் பிரகடனப் படுத்தப்பட்டது இதைத் தொடர்ந்து மலையகத்தின் பல பகுதிகளிலும் மேதினம் ஊர்வலங்களுடனும், கூட்டங்களுடனும் கொண்டாடப்படுகின்றது. பெரும்பாலும் தொழிற்சங்க ரீதியாகவே மேதினக் கொண்டாட்டங்கள் அமைகின்றன. மே தினத்தின் புனிதமான நோக்கங்களை வெளிக்கொணராத கொண்டாட்டங்களாகவே பெரும்பாலும் அவை அமைந்துவிடுகின்றன. இக் கொண்டாட்டங்கள் மேதினக் கொண்டாட்டங்கள் என்பதைவிட தொழிற்சங்க தலைவர்களை கௌரவிக்கும் அல்லது அவர்களுக்கு 'வால்பிடிக்கும்' வைபவங்களாக அமைகின்றன என்று சொல்வதே சாலச் சிறந்ததாகும்.

## இன்றைய மேதினம்

'உலகத் தொழிலாளரே ஒன்று படுங்கள்' என்ற கோஷத்தோடு ஆரம்பமான மேதினம் ஏறக்குறைய 100 வருடங்களைக் கடந்து வந்துள்ளது. இந்த 100 வருடங்களிலும் மேதினம் தனது ஆரம்ப நோக்கத்தை இழந்துவிட்டது என்றுதான் எண்ணத் தோன்றுகின்றது. தொழிலாளர்கள் இன்று ஒன்று சேறுவதற்குப் பதிலாக பல கூறுகளாகப் பிரிந்தே மே தினத்தைக் கொண்டாடுகின்றனர். அரசியல் கட்சிகள் ஒரு புறமும், தொழிற் சங்கங்கள் மறுபுறமுமாக தொழிலாளர்கள் கூறுபோடப்பட்டுள்ளார்கள். பல தொழிற் சங்கங்கள் இன்று அரசியல் கட்சிகளைச் சார்ந்திருப்பது இதற்கு ஒரு காரணமாகும். மேதினமன்று கொழும்பு நகரில் மாத்திரம் 10 க்கும் மேற்பட்ட மேதின ஊர்வலங்களும், கூட்டங்களும் நடைபெறுவது இந்த நிலையை ஊர்ஜிதம் செய்கின்றது. இது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேதனைக்குரிய ஒரு விடயமாகும் கொழும்பில் மட்டுமல்ல பிற மாவட்டங்களிலும் இதே நிலைதான். இப்படிப்பட்ட மேதினக் கூட்டங்களில் தொழிலாளர் பிரச்சனைகள், உரிமைகள் பற்றிப் பேசப்படுவதில்லை. மாறாக, அரசியல் கட்சிகளின் பிரசாரமும், தொழிற்சங்க பிரசாரமுமே நடைபெறுகின்றன. இது மட்டுமல்ல, இக்கூட்டங்களின் போது நடைபெறும் கலை நிகழ்ச்சிகளும் தொழிலாளரின் கவனத்தை திசை திருப்புவதாக அமைகின்றது.

## மேதின விழாவும் தீர்மானங்களும்

இம்முறை தோட்ட மக்கள் எந்த ரூபத்தில் மேதினத்தைக் கொண்டாடினாலும், தங்கள் எதிர்கால நன்மைகளை கருத்தில் கொண்டு செயல்பட வேண்டும். பின்வரும் விடயங்களில் தீர்மானங்களை எடுக்க முனையவேண்டும்

1 இன்னமும் நாடற்றவர் என்ற மனிதாபிமானமற்ற பட்டத்தை தாங்கி நிற்கும் 300,000 மக்கள் இலங்கை பிரஜாவுரிமை பெற வேண்டும்.

2 தேர்தல் காலத்திலும், தோட்டங்கள் தனியார்மயமாக்கப்பட முன்னரும் அளிக்கப்பட்ட வாக்குறுதிகள் நிறைவேற்றப்பட வேண்டும்.

3 தோட்டங்களை கிராமங்களாகக் கணிக்கப்பட்டு தோட்டங்கள் தோறும் தமிழ் கிராம சேவையாளர்கள் நியமிக்கப்பட வேண்டும்.

4 தோட்ட மக்களின் குடியிருப்புகள், விவசாயக் காணிகள் சொந்தமாக்கப்பட வேண்டும்

5 எட்டு மணி நேர வேலை என்ற நியதி தோட்ட மக்களுக்கும் ஏற்புடையதாக்க வேண்டும். பறிக்கும் கொழுந்தைக் கொண்டல்ல 8 மணி நேர வேலைக் கோட்பாடுகளுடன் கூடிய மாதச் சம்பளம் வழங்கப்பட வேண்டும்.

"உழைப்பு முதலீட்டை விடவும்
முதன்மை வாய்ந்தது"


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**உழைக்க மனமில்லாத எவனும் உண்ணலாகாது.**

(இறைவாக்கு)

அருட் திரு. கீத பொன்கலன்

லியோ மார்கா ஆஸ்ரம்

121/1. புனித தோமையர் வீதி, பண்டாரவளை

திலக பிரின்டர்ஸ் (Pvt) லிமிடெட், பண்டாரவளை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org